★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.
மலர் 3] சென்னை: வைகாசி 18உ வியாழன் (31—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 19உ வெள்ளி (1—6—56) [இதழ் 290

ரூ. 2 கோடி நஷ்டமாம்!

புதுடில்லி, மே 30—

இந்த மே திங்களில், நடைபெற்ற வேலை நிறுத்தத்தினுல், இரயில்வே இலாகாவினருக்கு ரூ. 2 கோடி நஷ்டமேற்பட்டதாக அதிகார பூர்வமான தகவல் தரப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தத்தை யொட்டி, போக்குவரத்துத் தடைப்பட்டதினுல் ஏற்பட்ட வருமான நஷ்டம், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தோர் இரயில்வே இலாகா சொத்துக்களுக்கு விளைவித்த சேதம் இவற்றினுல்தான் இந்த ரூ. 2 கோடி நஷ்டம் என்றும் கூறப்படுகிறது

'பூமிதான இயக்கம் ஒரு தேர்தல் 'ஸ்டண்ட்'"

'விநோபா பாவே அரசாங்கத்தின் கைப்பாவை'

'சமுதாய நலத் திட்டங்கள்— பட்டினி கிடப்பவனுக்கு போர்த்தப்படும் பட்டுச்சட்டை'

'அம்பர் சர்க்கா-வேலையின்மையை போக்க உதவாது'

காந்தீயவாதி குமரப்பாவின் கருத்துகள்

நெல்லூர், மே 29—

"வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 'அம்பர் சர்க்கா' பெருக்கத்தினுல் முடியாது," என்று, பிரபல காந்தீயவாதியான டாக்டர் ஜே. சி. குமரப்பா இங்கு கூறியிருக்கிருர்.

"பெரிய ஆலைகள், தொழிற்சாலைகள் இவற்றின் 'நாட்டுப்புற சோதரன்'தான் இந்த 'அம்பர் சர்க்கா' காந்தியார் சர்க்காவின் சமூக அம்சங்கள் இந்த 'அம்பர் சர்க்கா'வில் கிடையாது!

"விற்பனைக்காக உற்பத்தி செய்வது சர்வோதயமாகாது!

"வியாபாரத்திற்கென உற்பத்திச் சாதனங்களை பெரும் அளவு புகுத்துவது விலைக் கட்டுப்பாடு, போட்டி முதலியவற்றிற்கு இழுத்துச் செல்லும். சர்க்காருக்கு 'அம்பர் சர்க்கா'வில் நம்பிக்கையே கிடையாது; ஆனுல், வரப்போகும் பொதுத் தேர்தலை மனதில் எண்ணி, கோடிக் கணக்கான ரூபாய் செலவிட விருக்கிருர்கள்.

என்றும் குமரப்பா, சர்க்கார்மீது குற்றம் சாட்டியிருக்கிருர்.

"தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் இவை எல்லாம் பட்டினி கிடப்பவனுக்கு மாட்டப்படும் பட்டுச் சட்டைகளாகும்.

"கிராமமக்களின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்குவதற்கு உதவாத எந்த ஒரு திட்டமும், உதவாக்கரைத் திட்டமாகும் என்று நான் கருதுகிறேன்.

"படித்தவர்களுக்கு இங்கொன்றும் அங்கொன்றுமாக வேலைகள் தந்து, அவர்கள் சர்க்காரை கோக்கிப்பாயாமலிருப்பதற்காக—அவர்களின் கண்டனக் குரலை ஒடுக்குவதற்காக ஏற்பட்டவையாகும்,"

என்றும் டாக்டர் குமரப்பா இடித்துரைத்திருக்கிருர்.

"நிலப்பங்கீடு, 'உழுபவனுக்கே நிலம்' என்ற எல்லா கோஷங்களும், சர்வோதய இலட்சியத்திற்கு விரோதமானவையாகும். சர்வோதயம் சொத்துக்களுக்கு, பொதுநலன் கருதி ஒரு பாதுகாப்பு வேண்டும் எனறுமட்டுமே கூறுகிறது. காலத்திற்கும், இடத்திற்கும் தகுந்தவாறு, உதயமாகும் இயக்கங்கள், பலாத்காரத்திற்கே இழுத்துச் செல்லுபவையாக இருக்கும்.

"ஆச்சாரியாவிநோபா பாவேயின் பூமிதான இயக்கம், ஒரு 'தேர்தல் ஸ்டண்ட்' ஆகும். ஆச்சாரியா பாவே, சர்க்காருடையவும், அரசியல்வாதிகளுடையவும் கைப் பொம்மை ஆகி இருக்கிருர்.

"இன்னும் 10 ஆண்டுகளுக்குள் நிலைமைகள் சீர்செய்யப்படவில்லை என்ருல், ஒருபெரும் இரத்தப் புரட்சி ஏற்பட்டே தீரும் என்றும் கூறவிரும்புகிறேன்"

என்பதாயும், டாக்டர் குமரப்பா பூமிதான இயக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தம் கருத்தைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிருர்.

முன்னேற்றத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாம்!

பெங்களூர், மே 30—

இந்துஸ்தான் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட சாதனங்களைக் கொண்டு; முதல் கடைச்சல் இயந்திரங்கள் ('லேத்து'கள்) இணைக்கப்பட்டுள்ளனவென்றும், இது இந்தியாவின் முன்னேற்றத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியென்றும் தெரியவருகிறது.

பயன்பட வேண்டுமே!

புதுடில்லி, மே 30—

தோட்டப் பண்ணைத் தொழிலாளருக் கேற்றவகையில் தொழிலாளர் பிராவிடண்ட் நிதி திட்டத்தைத் திருத்த அரசியலார் உத்தேசித்துள்ளாராம்.

நாகர்களுக்கு தனி மாநிலம் அமைத்துத் தருவீர்களா?

ம. பி. போலீசார் தீவிர நாகர்களிடம் சரணடைந்துவிட்டது உண்மையா?

நாகர் பாதுகாப்புப்படை திரட்டப்பட்டிருப்பது உண்மைதானு?

மக்கள் சபையில் வல்லத்தரசு கேள்விமாரி

"இந்தியக் குடியரசுக்குள்ளாகவே ஒரு தனி நாகமலைப் பிரதேச மாநிலம் அமைக்க ஒப்புக்கொண்டு, பின்னர் அங்குள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம்தேட பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இந்திய சர்க்கார் முயற்சிக்குமா?"

என்று தோழர் முத்துசாமி வல்லத்தரசு மக்கள் சபையில் கேட்டிருக்கிருர்

அதற்குப் பதிலளிக்கையில் பிரதமர் நேரு குறிப்பிட்டதாவது:—

"பலாத்காரம் ஒழிந்து நிலைமை மாறினுலன்றி, நாகமலைப் பிரதேசம பற்றிய எந்தவித அரசியல் மாற்றம் குறித்தும் சர்க்கார் பரிசீலனை செய்வதாகு இல்லை. அமைதி ஏற்பட்டான பிறகு வேண்டுமானுல், விருப்பு வெறுப்பின்றி சாவதானமாக உட்கார்ந்து என்ன செய்யப்பட வேண்டும் என்பது குறிதது நாம் பேசலாம்."

தொடர்ந்து தோழர் வல்லத்தரசு கேள்விகளைத் தொடுத்திருக்கிருர்:—

"நாகமலைப் பிரதேசத்தில், இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மத்தியப் பிரதேச போலீசார், இரண்டு 'பட்டாலியன்'களைச் சேர்ந்தவர்கள், தீவிர நாகர்களிடம் சரணடைந்து ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டது உண்மையா?

"நாகர் தேசியக் கவுன்சிலைக் கலைத்துவிட்ட பிறகு, நாகர் தலைவரான பிஜோ தீவிரவாதிகளின் தலைமைப் பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுக் கொண்டிருப்பது உண்மையா?

"அங்கு, நாக மாணவர்கள், இளைஞர்கள் அடங்கிய நாகர் பாதுகாப்புப்படை திரட்டப்பட்டிருப்பது உண்மையா?

(4-ம் பக்கம் பார்க்க)

திருச்சி மாநில மாநாட்டுத் தலைவர்

இரா. நெடுஞ்செழியன்

வெண்ணெயும் சுண்ணும்பும் ஒன்ரும்!

தட்சிணப்பிரதேசத்திற்கும் திராவிடநாடு அமைப்புக்கும் வித்தியாசம் தெரியாத விவேகி!

வடக்கில் செல்வாக்கு பெற தெற்கு பெரிய இராஜ்யமாக வேண்டுமாம்!

என்ருவது ஒருநாள் தட்சிணப்பிரதேசம் அமையுமாம்!

ஆச்சாரியாரின் அரசியல் கருத்துக் குழப்பம்

மதுரை, மே 30—

"தெற்கில் ஒரு பெரிய இராஜ்யம் நிறுவ வேண்டும் என்பதற்கு, திராவிட முன்னேற்றக் கழகம்கூட ஆதரவாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வினைவைப் புறக்கணிக்கவில்லையானுலும் திராவிடஸ்தான் கருத்து, மத்திய ஆட்சியிலிருந்து துண்டித்துக் கொள்ளுவதைக் கண்டிப்பாகக் கொண்டிருக்கவில்லை."

"திருச்சி மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றியுள்ள தனிநாடு கோரிக்கைத் தீர்மானத்தை, காமராசர் கண்டித்திருக்கிருர். என்றென்றும் செயல்படப் போகாத ஒன்றைக் குறித்து ஏன் கோபித்துக் கொள்ளுவது?"

"என்ருவது ஒருநாள், ஒரு பெரிய தெற்கு இராஜ்யம் உருவெடுக்கத்தான் போகிறது. வடக்கில் செல்வாக்கு உடையவர்களாக இருக்க தென்னுட்டு மக்கள் விரும்புவார்களானுல், அவர்கள் ஒன்றுபட வேண்டும், எனவே, தயக்கமோ, அச்சமோ இன்றி. காங்கிரஸ் தீர்மானப்படி தட்சிணப் பிரதேசம் அமைக்க வேண்டும்."

இவ்வாறு, மொட்டைத் தலையும்-முழங்காலும் ஒன்றே என்று வாதிட்டிருக்கிருர்—அரசியல் இருட்டறையில் தள்ளப்பட்டிருக்கிற இராசகோபாலாச்சாரியார் பேசி இருக்கிருர்.

காலஞ் சென்ற பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் படத்தைத் திறந்து வைத்தார்.

அப்பொழுது, தட்சிணப் பிரதேசம் பற்றி அவர் மேலும் குறிப்பிட்டுக் கூறியதாவது:—

"தட்சிணப்பிரதேச அமைப்பை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யவே நான் மதுரை வந்திருப்பதாக நினைக்கிருர்கள். இல்லை, நான் எந்தவிதப் பணியும் செய்ய [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இராஜிங்கம்
சென்னை 31—5—'56 வியாழன்

அரசாங்கத்துக்கும் பொறுப்புண்டு!

அண்மையில் குறிப்பிடத் தகுந்த இரண்டு சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. இரண்டிற்கும் இந்தியப் பேரரசுதான் மறைமுகமாகவோ, நேரடியாகவோ பொறுப்பேற்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அவ்விரண்டில் ஒன்றை மட்டும் இப்பொழுது குறிப்பிடுவோம்.

கரக்பூர் புகைவண்டி தொழிற்சாலையில் வேலை செய்துவரும் 15,000 தொழிலாளர்களில் ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறு வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டு இருபது நாட்கள் ஆகின்றன. சில தொழிலாளர்களைக் குறிப்பிட்ட வகையில் தரம்பிரிக்க வேண்டும் என்பதே வேலை நிறுத்தத்தை மேற்கொண்ட தொழிலாளர்களின் கோரிக்கையாகும்.

வேலை நிறுத்தம் தொழிலாளர்களின் பிறப்புரிமையாகும். ஜனநாயக நாடுகள் அனைத்தும் தொழிற் சங்கங்களுக்குள்ள வேலை நிறுத்த உரிமையை ஒப்புக்கொண்டே உள்ளன.

எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வது என்ற போக்கை, எந்த தொழிற்சங்கமும் பின்பற்றுது. குறைகளைப் போக்கிக் கொள்வதற்கு, நேரடி பேச்சுவார்த்தைகள் மூலம் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டும், பலன் ஏற்படாத நிலையில்தான் இறுதியாக வேலை நிறுத்தத்தைத் தொழிற் சங்கங்கள் மேற்கொள்ள முன்வரும் என்பதும் அனுபவ உண்மையாகும்.

மேற் குறிப்பிட்ட உண்மைக்கு மாறாக நடந்துகொள்ளக்கூடிய, பொறுப்பற்ற விஷமிகள் தலைமையில் நடைபெறும் இரண்டொரு தொழிற் சங்கங்கள் இருப்பது எதிர்பார்க்கக்கூடியதே. இரண்டொன்றின் போக்கைக் கொண்டு பெரும்பாலான தொழிற் சங்கங்களின் போக்கை நிர்ணயிக்க முனைவது பொருந்ாது—கூடாது.

கரக்பூர் தொழிற்சங்கத்தில் உள்ள பெரும்பான்மை தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆனால் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் ஆர்வங்காட்டினர். அதாவது, தொழிற் சங்கம் கையாண்டுவரும் வேலை நிறுத்தக் கோட்பாட்டிற்கு எதிராக விசுவாசத் தொழிலாளர்களாக ஏறத்தாழ 5,000 தொழிலாளர்கள் பணி புரிந்திருக்கின்றனர்—இல்லை—பணிபுரிய வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தொழிற் சங்க முடிவைத் தோற்கடிக்கும் முனைப்பில் பணியாற்றிவந்த விசுவாசத் தொழிலாளர்களின் செயல், அதற்குரிய எரிச்சலையும், எதிர்ப்பையும் சங்கத் தீர்மானத்தின்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடை உருவாக்கி இருக்கிறது. அதன் விளைவாக வேலைநிறுத்தத்தை மேற்கொண்டிருந்தத் தொழிலாளர்களிடமிருந்து மனிதப் பண்பு தொலைந்துபோய்விட்டது.

தொழிலாளர்களும், விரும்பத்தகாததும், வெறுத்துக் கண்டிக்கத்தக்கதும், இதுவரை கண்டும் கேட்டும் இராததுமான விசித்திரமான கோர விளையாட்டில் இறங்கிவிட்டுள்ளனர். விசுவாசத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த புகைவண்டியை நிறுத்தி, இயந்திரத்தை ஓட்டிவந்த ஓட்டியையும், அவருடைய துணை ஊழியரையும் கையப் புடைத்துள்ளனர் தொழிலாளர்கள்.

அந்த அளவுடன் தொழிலாளர்கள் நின்றிருந்தால், அவர்கள் மன்னித்தற்குரியவர்களே எனக் கொள்வது ஏதோ ஒரு வகையில் நியாயமானதாக இருக்க முடியும். ஆனல், தங்கள் மனம் போன போக்கில், அப்புகைவண்டி ஓட்டியையும், அவருடைய துணை ஊழியரையும் இயந்திரத்திலிருந்து இறக்கிவிட்டு, இயந்திரத்தை இயக்கிவிட்டுவிட்டனர். ஓட்டி இல்லாது இயந்திரம் ஓடி இருக்கிறது. அதன் விளைவாக புகைவண்டி நிலையத்திற்குச் சேதமும், பலருக்குப் படுகாயமும் ஏற்பட்டு இருக்கிறது.

இச்செயல் வெறும் பலாத்காரம் என்ற அளவுடன் இருந்து விடுவதன்று. இது மிருக சுபாவத்திலும் காட்டுமிருக சுபாவம் என்றே கொள்ள வேண்டும். இந்த அக்கிரமச் செயலுக்கு பொறுப்பானவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர்களே யாவர் என்பது இருகருத்து இருப்பதற்கு இடமில்லை.

மக்கள் சபையில் இதுபற்றி குறிப்பிட்டு பேசிய இந்தியப் பிரதமர், பலாத்காரத்தை, மனம் கொதித்துக் காரசாரமாகக் கண்டித்துப்பேசிஇருக்கிறார். பலாத்காரம் குறித்து தம்தம் கருத்து என்ன என்பதை வெளிப்படையாக, திட்டவட்டமாக, அரசியல் கட்சிகள் அனைத்தும் கூறிவிட வேண்டுமென உணர்ச்சிவயப்பட்டு வேண்டியுள்ளார்.

பலாத்காரம் எந்த உருவில் வெளியாவதானாலும், எந்தக் கொள்கையின் வெற்றிக்காக மேற்கொள்ளப்படுவதானாலும், அம்முறை அறவே கூடாது என்பதையே தனது அடிப்படை இலட்சியத்தில் ஒன்றாகக்கொண்டு செயல்பட்டு வருவது நமது கழகமாகும். அத்துறையில் நமது கழகம் கொண்டுள்ள விழுமிய கருத்தும், ஒழுகிவரும் தூய செயலும், மற்ற அரசியல் கட்சிகள் பின்பற்றத் தக்கனவாகும் எனக் குறிப்பிடுவது மிகையாகாது.

கரக்பூரில் நடைபெற்றுள்ள பலாத்காரச் செயலைக் கண்டித்துக் காரசாரமாகப் பேசினதுடனும், பலாத்காரம் குறித்து மற்ற அரசியல் கட்சிகள் தம் தம் கருத்தை வெளிப்படையாக உரைத்துவிட வேண்டும் என வேண்டிக் கொண்டதுடனும், இந்தியப் பிரதமரின் கடமையும், பொறுப்பும் முடிந்துவிடவில்லை என்பதை நாம் குறிப்பிட எண்ணுகிறோம்.

கரக்பூர் விசித்திர பலாத்காரச் செயலுக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாக அதைச் செய்த தொழிற் சங்கத்தினராகவே இருந்த போதிலும், அந்த அக்கிரமத்தையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு அத்தொழிற் சங்கத்தை விரட்டி இருப்பதில் இந்தியப் பேரரசே முழுதும் பொறுப்பேற்கவேண்டும். இவ்வாறு நாம் குறிப்பிடுவது சிலருக்கு வேடிக்கையாகத் தென்படக்கூடும்.

இப்பொழுது நடைபெற்று வரும அரசை தங்கள் சுதந்திர அரசாகக் கொள்ள அனைவரும் முன்வர வேண்டும் எனக் கோரப்படுகிறது. இவ்வரசை நடத்தும் பொறுப்பில் உள்ள பண்டித நேருவின் காங்கிரஸ் ஆட்சியை மக்கள் ஆட்சி எனக் கொள்ளவேண்டும் எனவும் வேண்டிக்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கோரலும், வேண்டுதலும் பொருள் நிரம்பியது போல் தொனிக்கிறதேயல்லாது, உண்மையில் அவற்றில் பொருள் ஏதுவும் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. காங்கிரஸ் ஆட்சியாளர்களின் சொல்லில் வெள்ளப்பெருக்கெடுக்கும் பரிவு, அவர்கள் செயலில் பாலைவனம்போல் வறண்டுக் கிடக்கிறது.

தங்களுக்குக் குறை இருக்கிறது என்று கரக்பூர் தொழிலாளர்கள் எண்ணுவதற்கே இடமில்லாத வகையில், அவர்கள் நல்வாழ்வில் தானுக அக்கறை எடுத்துக்கொண்டுஇருக்க வேண்டும் இந்தியப் பேரரசு. அத்தகு பெரும் போக்கை இந்திய பேரரசிடம் எதிர்பார்க்கக் கூடாது என்பதானல், தங்கள் குறைபற்றித் தொழிலாளர்கள் குறிப்பிட்ட பிறகாவது, அதைக் களைந்தெறிய இந்தியப் பேரரசு முன்வந்து இருக்க வேண்டும். அதையும் எதிர்பார்க்க முடியாது இந்தியப் பேரரசிடம் என்பதானல், தங்கள் குறையைப் பரிகரித்துக் கொள்ள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்போவதாக அத்தொழிற் சங்கம் அறிவித்த பிறகாவது, அதைக் கேட்டறிந்து நியாயம் வழங்க இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கவேண்டும்.

தம் குடிமக்களிடம் காட்டித் தீரவேண்டிய இப்பரிவான போக்கிற்கு இந்தியப் பேரரசு கட்டுப்பட்டு நடக்காது என்பதானலும், வேலை நிறுத்தத்தைத் துவங்கின இரண்டொரு நாளைக்குள்ளாகவாவது, தொழிலாளர்களின் குறையைக் கேட்டறிந்து பரிகாரங் காண இந்தியப் பேரரசு முன்வந்திருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லையானலும், தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முறியடிக்கவும், தொழிற்சங்கத்தில் நிரந்தரமாகப் பிளவேற்படுத்தவும், இந்தியப் பேரரசு முயன்றிருப்பதுபோன்று, முடலாமலாவது இருந்திருக்கவேண்டும். தொழிலாளர்களின் நெஞ்சுரத்தைக் குலைக்க இந்தியப்பேரரசு கையாண்ட அடக்குமுறைகளைக் குறித்து குறிப்பிடாமல் இருப்பதே நல்லது.

எனவே, தொழிலாளர்கள் மேற்கொண்ட பலாத்காரம் பலமான கண்டனத்துக்குரியதாக இருப்பது போலவே, அவர்களை அந்த நிலைக்குத் துரத்தியடித்த இந்தியப் பேரரசின் நடைமுறையும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதேயாகும்.

பலாத்காரத்தை நாட்டை விட்டு விரட்டி அடிக்க, மக்கள் மத்தியிலிருந்துத் துரத்தி அடிக்க, அரசியல் கட்சிகளுக்குள்ள பொறுப்பைப் போன்றே, அரசாங்கத்திற்கும் பொறுப்புண்டு என்பதை வலியுறுத்திக் கூறி இதை முடிக்கிறோம்.

கட்சி உறுப்பினர்களிடை இலஞ்சப் பழக்கம்!

தொழிலாளர் நலனில் அக்கறையற்ற போக்கு!

உற்பத்தி பற்றித் தவறுன கணக்குத் தரும் செயல்

செஞ்சீனவின் ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றம் குறித்து 'பீபிள்ஸ் டெய்லி' கருத்து

ஹாங்காங்—

செஞ்சீனவின் ஐந்தாண்டுத் தொழில் அபிவிருத்தித் திட்டம், கேடுகள் நிறைந்ததாகிவிட்டிருப்பதாக சீன சர்க்கார் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கம்யூனிஸ்டு கட்சியின் சில உறுப்பினர்களும், இயக்கங்களும், இந்தத் திட்டத்தில் கேடுகள் புகுந்தமைக்குக் காரணமானவர்கள் என்றும் கூறப்படுகிறது.

கட்சிக் கட்டுப்பாடு மீறப்பட்டு, உற்பத்திக்குத் தீங்கு இழைக்கப்பட்டிருப்பதாக 'பீகிங் பீபிள்ஸ் டெய்லி' என்ற கம்யூனிஸ்டு கட்சி தின இதழ் பல சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, குறைப்பட்டுக் கொண்டிருக்கிறதாம்!

கட்சியில் சில கெட்ட உறுப்பினர்களும், இயக்கங்களில் சில தீதான நபர்களும் புகுந்துவிட்டனர் என்றும் குற்றம் கூறப்பட்டிருக்கிறதாம்.

முற்போக்கு சக்திகள்போல வேஷமிட்டு கட்சிக்குள் நுழையவும், கட்சி உறுப்பினர்களைத் தவறுன காரியங்களைச் செய்யுமாறு தூண்டவும், சில பிற்போக்காளர்கள் முயற்சிப்பதாகவும் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

அந்த இதழில் மேலும் காணப்படுபவை என்று கூறப்படுவதாவது:—

"சில (கம்யூனிஸ்டு) கட்சி உறுப்பினர்கள், போனஸ், மற்றும் கௌரவப்பட்டங்கள் பெறுவதற்காகத் தங்கள் தவறுகளை மறைத்து, உற்பத்தி பற்றி தவறுன கணக்குகளைத் தந்து கட்சியையும், சர்க்காரையும் ஏமாற்றுகின்றனர். சில கட்சி உறுப்பினர்கள், பெருங் குற்றங்களைப் புரிந்துவிட்டு, தொழிலாளர்களின் பாதுகாப்பைப் பற்றியும், கஷ்டநஷ்டங்களைப் பற்றியும் கவலையற்றுப் போய்விட்டதின் விளைவாகத் தொழில் விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதுடன், ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டு வருகின்றது.

"இதுமட்டுமன்றி, இலஞ்சம், திருட்டு, கையாடல், சட்டங்களை மீறுதல், கட்சி ஒழுங்குகளுக்குப் புறம்பாக நடந்துகொள்ளுதல் முதலியன கட்சி உறுப்பினர்கள் சிலரிடை வெகு சர்வ சாதாரணமாக நிலவுகின்றன.

"தொழிற்சாலைகளில் நிகழும் குற்றங்களுக்கு, தகுந்த கடுமையான தண்டனை விதிக்க வேண்டுமென சிபாரிசு செய்கிறோம்."

இலங்கைத் தளங்களை இழக்கும் பிரிட்டன்

மோம்பாசாவில் கடற் படைத் தளம் அமைக்க முயற்சி?

நைரோபி, மே 29—

இலங்கையிலுள்ள தளங்களை பிரிட்டன் இழக்க நேரிடக்கூடுமாதலால், மொம்பாசா தீவு கடற்படைத் தளமாக்க படலாம் என்று கூறப்படுகிறதாம்.

கெனியா சட்டசபையின் இரு உறுப்பினர்கள், மொம்பாசா உள்பட கரையோரப் பிரதேசம் ஒன்றை ஜான்சிபார் சுல்தானிடமிருந்து பிரிட்டன் குத்தகைக்கு வாங்கியுள்ளது பற்றிய ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கொண்டுள்ளனர் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

சிறியகைத்தொழில்களுக்கு கடன் வசதியாம்

சென்னையிலும், கோவையிலும் பரீட்சார்த்தத் திட்டமாம்

சர்க்கார் மூலமும், மற்றும் நிறுவனங்கள், மூலமும் சிறிய கைத்தொழில்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்கான பரீட்சார்த்தத் திட்டம், சென்னை, கோவை, பம்பாய், சூரத் விசயவாடா ஆகிய இடங்களில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

புகைவண்டி பிரயாணத்தில் உள்ள வசதிக் குறைவை உணர்த்த!

சங்கிலியைப் பிடித்திழுத்து புகைவண்டியை நிறுத்தினர்!

பூனு, மே 28—

தேவ்கோட்—பூனுவுக்கு இடையில் சென்றுவரும் புகைவண்டியில் என்றும்போல் ஜனநெருக்கடி அதிகமாக இருந்த காரணத்தினல், பிரயாணிகள் வசதியாகப் பிரயாணம் செய்யவேண்டியதற்காக, மேலும் புதிய வண்டித் தொடர்களை இணைக்க வேண்டியதின் அவசியததை அரசாங்கத்திற்கு நினைவுறுத்த, தேவ்கோட் பகுதியில் வேலை செய்துவரும் பாதுகாப்புத் துறை ஊழியர்கள், ஒரு புதிய நடவடிக்கையை மேற்கொண்டனர். அதாவது, அபாய சங்கிலியைப் பற்றி இழுத்து புகைவண்டியை நிறுத்திவிட்டனர்.

இவ்வாறு புகை வண்டியை நிறுததினதின் காரணமாக, 45-நிமிஷங்களில் பூனுவை அடைய வேண்டிய புகைவண்டி, ஐந்தரை மணி நேரம் ஆகியும் ஐந்தே ஐந்து மைல் தூரம்தான் சென்றிருக்கிறது.

புகை வண்டியை நிறுத்தும் நிகழ்ச்சி இன்று காலை துவங்கியது. அத்துடன் புகைவண்டியை நிறுத்துவது நின்றுவிடவில்லை மீண்டும் மாலையும் அதே நிகழ்ச்சி நடைபெற்றது.

பம்பாயிலிருந்துவரும் நேர் புகைவண்டிகளையும் நிறுத்த திட்டமிடப்பட்டிருந்தது எனவும் கூறப்படுகிறது.

புகை வண்டிகளில் அளவுக்குக் கூடுதலாக மக்கள் பிரயாணம் செய்து நெருக்கடிக்கு ஆளாவதுடனல்லாது, அதனல் படிக்கட்டுகளில் பிரயாணம் செய்வதால் உயிருக்கே ஆபத்தைத் தேடிக்கொள்வதும் நேருகிறது என, புகைவண்டியை நிறுத்தினவர்கள், தங்கள் செய்கைக்கு விளக்கமளித்தார்கள்.

திருச்சி மாநில மாநாடு புகைப் படங்கள்

திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை புகைப்படமெடுத்துள்ள புகைப்பட நிலையங்கள், பத்திரிகையாளர்கள், தோழர்கள் எல்லாம், ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வீதம், தலைமை நிலையத்தில் சேகரித்து வைப்பதற்காக அனுப்பி உதவுமாறு கோரப்படுகிறார்கள்.

தி. மு. க. தலைமை நிலையம்
'அறிவகம்,' சென்னை—13

ஆயுதபலத்தைப் பெருக்க ஜப்பான் முடிவு

முப்படைகள் உருவிலும் வலிவிலும் விரிவடைகின்றன

கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது

டோக்கியோ, மே 28—

ஜப்பானிய இராணுவம் விரிவாக்கப்படுகிறதாம்—திருத்தி அமைக்கப்படுகிறதாம்!

"இன்னும் 5 முதல் 10 ஆண்டுகளுக்குள், ஜப்பான், தன்னைத் தாற்காத்துக்கொள்ளுகிற இராணுவ பலத்தைப் பெற்றுவிடும்," என்று அமெரிக்க வட்டாரங்கள் நம்புகின்றனவாம்!

ஜப்பான் மீண்டும் ஆயுதபாணியாவதை, எதிர்க்கட்சியினராக விளங்கும் சோஷலிஸ்டுகள் எதிர்க்கிறார்கள்.

யுத்த முடிவில் மேற்கொள்ளப்பட்ட ஜப்பானிய அரசியல் சட்டத்தில் உள்ள 'யுத்தமே கூடாது' என்ற அம்சம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் சோஷலிஸ்டுகள் கூறுகின்றனர்.

ஆனல், ஆளும் வர்க்கத்தினரோ 'தாககுதல் எற்பட்டால், முதல் தாக்குதலைச் சந்திக்கவேனும் படைபலம் வேண்டும்' எனக் கூறி, அரசியல் சட்டத்தின் தகராறுக்கு உட்பட்டு நிற்கும் 'யுத்தம் கூடாது' என்ற விதியைத் திருத்தவேண்டும் என்று கூறுகின்றனர்.

ஆறு ஆண்டுத் திட்டத்தில், முதல் ஆண்டில் மட்டும் ரூ. 186·6 கோடி செலவிடுவதென 1956—57-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு மக்கள்சபையில் நிறைவேறியுள்ளது.

குறிப்பாக, விமானப் படைதான் வேகமாக வளருவதற்கான தீவிர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம்.

இப்போது ஜப்பானின் முப்படைகளும் புதிய உருவும், வலிவும் பெற மும்முரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்!

எண்ணெய் மதிப்பீடு

அசாம் எண்ணெய் கம்பெனியால் வேலை நடத்தி வரப்படுகிற அசாம் எண்ணெய் ஊற்றுப் பகுதிகளில் சுமார் 180 இலட்சம் டன் எண்ணெய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அமுலாகும் காலம் நிர்ணயிக்கின்றனர்!

சிங்கள மொழி பற்றி இலங்கை மந்திரி சபை கட்சி முடிவு

கொழும்பு, மே 29—

சிங்களம் மட்டுமே அரசாங்க மொழி என்று ஒப்புக்கொள்வதற்கு 1960 டிசம்பர் 30-ந் தேதியை இறுதி நாளாக நிர்ணயிப்பதென இலங்கை மந்திரி சபை கட்சி முடிவு செய்துள்ளதாம். இதை ஒட்டி மசோதாவில் மாறுதல் செய்யப்படுமாம்.

மசோதாவில், கொள்கைகள் மட்டுந்தான் இருக்கும்; அதை எப்படி அமுல் நடத்துவதென்ற விவரங்கள் இருக்காதெனத் தெரிகிறது.

1960-ம் ஆண்டு வரையில், தமிழ், ஆங்கிலம, சிங்களம் ஆகிய மொழிகளைத் தொடர்ந்து உபயோகிக்கலாமென உத்திரவிடுவதற்கு பிரதமருக்கு அதிகாரம் இருக்கும் அளவில், மசோதா திருத்தப்பட வேண்டுமெனவும் கட்சி வற்புறுத்தியதாம்.

மைனுரிடி மக்களிடை ஏற்களவேயுள்ள அதிருப்தியைக் குறைப்பதற்காகவே இந்தமாறுதல்கள் செய்யப்பட்டிருக்கக் கூடுமெனப் பலர் கருதுகின்றனர்.

மொழி சம்பந்தமான கொள்கையை அமுல் நடத்தும் பொறுப்பை பிரதமரே ஏற்றுக் கொள்ளக் கூடுமெனவும் கருதப்படுகிறதாம்.

வேலை தேடித் தருவதற்கு மேலும் நிலையங்களாம்!

ரூ. 70 இலட்சம் செலவிட சர்க்கார் திட்டமாம்

மொத்தம் ரூ. 70 இலட்சம் செலவில், மேலும் 125 வேலை தேடித்தரும் நிலையங்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திறப்பதென இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனரென்று மக்கள் சபையில், தொழிலாளர் நல மந்திரி தெரிவித்துள்ளார்.

இவைகளையும் சேர்த்து, இரண்டாவது திட்டகால இறுதியில் மொத்தம் 256 வேலை தேடித் தரும் நிலையங்கள் இருக்குமாம்!

செய்திச் சுருள்

திருக்குறளைக் கற்றவர்!

'நாட்டை ஆளும் அமைச்சராகத் தகுதியுடையவர்'

அனுபவ வாழ்க்கைக்கு அடிப்படையானது எது?

"பல புலவர்களால் பழங்காலத்தில் பல பாக்களால் பாராட்டப்பட்ட நூல் ஒன்று உண்டென்றால், அது திருக்குறளைத் தவிர வேறில்லை. திருக்குறள் ஒரு வாழ்க்கை வழி நூல்; அரசியல் நூல்; ஒழுக்க நூல்; ஏன்? உலகின் பொதுநூலுமாகும். திருக்குறளை கற்ற ஒருவன் நாட்டை ஆளும் அமைச்சனுகத் தகுதியுடையவன். பயின்று அதன் வழி நின்று அரசை நடாத்திச் செல்லவேண்டும்; அறமும் பொருளுமே வாழ்க்கைத் துணை என்று கருதுதல் கூடாது; இன்பத்துப் பாலே அனுபவ வாழ்க்கைக்கு அடிப்படையானது; இன்பத்துப் பாலில் காணப்படுகின்ற சிறந்த நயங்கள் உலகில் வேறு எந்நூலிலும் காண்பது அரிதாகவுள்ளது; இன்பத்துப் பாலை இன்னின்னவர்கள்தான் கற்கவேண்டுமென்பதில்லை; யாவரும் கற்கலாம்,"

என்று, பேராசிரியர் லெ ப. கரு. இராமனுதன் (அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கீழைக் கலைத் துறைத் தலைவர்) அவர்கள், 27—5—56ல், புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றும்பொழுது குறிப்பிட்டார்.

புலவர் நடராசன், கூட்டத்திற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்றார்; திரு. இரா. சண்முகம் 'தெளிந்த நெறி' எனும் தலைப்பில் உரையாற்றினர்.

புத்தர்—வள்ளுவர் விழா

இராயபுரம், இலக்கிய மன்றச் சார்பில், 27—5—56 காலை 10 மணியளவில் கல்மண்டபம், நகராண்மைக் கழக ஆண் பள்ளியில் புத்தர்—வள்ளுவர் விழாச் சிறப்புக் கூட்டம் திரு. பி. தங்கராசன் (உறுப்பினர் நகராண்மைக் கழகம்) தலைமையில் நடைபெற்றது. ஆங்கில் புத்தபிட்சு சுமணு, திரு. இராமநாதம் (பிள்ளை) ஆகியோர் முறையே 'புத்தரின் போதனைகள்,' 'வள்ளுவரின் வாய் மொழி' என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். அடுத்து தோழர் கோ. இறைமுடிமணி பேசினர்.

இந்தியாவில் இரும்புக் கனி உற்பத்தி 1956 பிப்ரவரி மாதத்தில் 3,77,591 டன்னுக இருந்தது. 1956 மார்ச் மாதத்தில் 3,99,651 டன்னுக அதிகரித்தது.

'புத்தர் பிக்சர்ஸ்' துவக்க விழா

23—5—56-ல், சென்னை நியூடோன் ஸ்டுடியோவில், 'புத்தர் பிக்சர்ஸ்' என்ற ஒரு படக்கம்பெனி துவக்க விழா நடைபெற்றது.

நடிகர் வி. நாகையா தலைமையில், விஸ்வநாதன்—இராமமூர்த்தி இன்னிசை வாத்தியக் குழுவினருடன், திருச்சி லோகநாதனின் 'புத்தா சரணம்' என்ற பாடலுடன் இப்படக் கம்பெனியின் முதல் தயாரிப்பான 'பதி பக்தி' என்ற படத்தின் துவக்க விழா நடைபெற்றது. கம்பெனியின் நிர்வாகி தோழர் ஜி என். வேல்மணி அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

விழாவில் முதலமைச்சர் காமராசர் கலந்துகொண்டு ஆசிகூறினர். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், மு. கருணாநிதி, எம். ஜி இராமச்சந்திரன், சிவாஜி கணேசன், எஸ். வி. சகஸ்ரநாமம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

விழாவிற்கு நடிக—நடிகையர்களும், எழுத்தாளர்களும், டைரக்டர்களும், படமுதலாளிகளும் வந்திருந்தனர்.

பாராட்டுக் கூட்டம்

27-5-56 மாலை 6 மணிக்கு, குடந்தை சர். ஏ. டி. பன்னீர்செல்வம் சமரச வாலிபர் சங்கத்தின் சார்பில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் சென்ற நகராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற குடந்தை 28-வது வார்டு நகரசபை உறுப்பினர் திரு. என். கே. அவினுசிலிங்கனுக்கு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் திரு. ஏ. துரைராஜ், எம். கே. கந்தசாமி, பி. டி. சண்முகம் ஆகியோர் பேசினர்.

திருமணம்

27—5—56 காலை 9 மணியளவில், புதுவையில், தி. மு. கழகத் தோழர் இராசு—சென்னை தோழியர் கவுரி திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. பாண்டியன், செ. கோவிந்தராசன் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு தி. மு. கழகச் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. மற்றும், பலரும் ஏராளமான பரிசுகள் வழங்கினர். திருமண நினைவாகப் புதுவை தி. மு. கழகத்திற்கு ரூ 5-ம், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2-ம் மணமக்கள் அன்பளிப்பாகத் தரப்பட்டது. 'நம் நாடு' இதழுக்குத் தரப்பட்ட ரூ. 2-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

மாநில மாநாடு—விடுதலைப் படை வீடு! வெள்ளம் போல் மக்கள் திரண்டிருக்கும் காட்சி!



திரையை விலக்குகிறார் தேபர்!

திரு-கொ. காங்கிரசில் கோஷ்டிச் சண்டை

மந்திரிசபையை வீழ்த்தியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை

திருவனந்தபுரம், மே 29—

கட்சிக் கட்டுப்பாடுகளை மீறியதாக, கலைக்கப்பட்ட சட்டசபையில் உறுப்பினராயிருந்த எண்மர் உட்பட பிரபலமான காங்கிரஸ்காரர்கள் 10 பேர் மீது, திரு-கொச்சி பிரதேசக் காங்கிரஸ் செயற்குழுவினர் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலிருந்த உறுப்பினர்கள் ஆறு பேர் வெளியேறியதால் மந்திரி சபை வீழ்த்தப்பட்டது நினைவிருக்கலாம்; அந்த ஆறு பேர் உட்பட எட்டு பேர்களும், கட்சியில் இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு எந்தவித நியமன அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி எதும் வகிக்கக் கூடாது என்றும் செயற்குழுவினர் முடிவு செய்திருக்கிறார்களாம்.

மேலும், முன்னாள் சட்டசபை உறுப்பினர்கள் இருவரையும் கட்சியிலிருந்து இரண்டாண்டுக் காலத்திற்கு விலக்கி வைத்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

திரு-கொச்சியில் பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமையில் இருந்த காங்கிரஸ் மந்திரி சபை வீழ்த்தப்பட்டது நினைவிலிருக்கலாம். ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் மந்திரி சபை மீது சில குற்றச்சாட்டுக்களைக் கூறி, அதன் பேரில், மந்திரி சபையினர் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று கோரினர். தங்கள் முயற்சியில் வெற்றிகிட்டாதுபோகவே, கட்சியை விட்டு வெளியேறியதின் விளைவாக, காங்கிரசுக்கு சட்டசபையில் இருந்த பெரும் பான்மை பலம், பட்டுப்போயிற்று.

பின்னர்தான் சட்டசபை கலைக்கப்பட்டு, ஜனாதிபதி ஆட்சி அமுலுக்கு வந்தது.

இதன் பின்னர், கடந்த திங்களில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர், இந்த மாநிலத்திற்கு வந்து, காங்கிரஸ் கோஷ்டிகளை எல்லாம் சந்தித்து, அவர்கள் அனைவரையும் ஒட்டுப் போட முயற்சி செய்தார்; ஆனால், அந்த முயற்சி தோற்றுப் போயிற்று. பின்னர்தான், அகில இந்தியக் காங்கிரஸ் தலைமையின் உத்தரவுக்கு இணங்க, கோஷ்டிகள் அமைத்துக் கொண்டவர்கள்மீது, பிரதேசக் காங்கிரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

'கக்கன்ஜீ! கழகத்தைக் கைவிடுக' என்று நான் கூறவில்லை'

'தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் கழகத்திற்காக வேலைசெய்கிறார்கள் என்று நான் கற்பனையும் செய்ததில்லை'

'வகுப்புவாதச் சக்திகள் காங்கிரசில் நுழைவதையே கண்டித்தேன்'

"தமிழ் நாடு காங்கிரஸ், திராவிட கழகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதை நான் கண்டித்தேன் என்ற பொருள் தரும் வகையில் 'டைம்ஸ் ஆப் இந்தியா,' இதழில், 'தமிழ் நாடு கடிதம்' பகுதியில் ஒரு தலைப்பை, சில நாட்களுக்கு முன்பு நான் கண்டேன்.

"இது பற்றிய விபரங்களைத் தேடி இங்கு கூற முயற்சித்திருக்கிறேன்.

"பிரதேச காங்கிரஸ் தலைவர்கள் செயலாளர்கள் கூட்டத்தில், நான் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரிடத்தில், 'கக்கன்ஜி! தாங்கள் கழகத்தைக் கைவிட வேண்டும்' என்றும், 'தமிழ் நாடு காங்கிரசில் கழகத்தவர் புகுந்துவிட்டார்கள்; நுழைந்திருக்கிறார்கள்' எனவும் தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர்களை எச்சரித்ததாக, தென்னாட்டுப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருப்பதாகவும் எனக்கு இப்போது தெரிய வந்துள்ளது.

"இந்த விபரங்களைப் பிரசுரித்த அந்த இதழுக்கு என் நன்றி; ஏனெனில், இது பிரசுரம் செய்யப்படாவிட்டாலும், வெறும் வதந்திகள் கூட இதே அளவு தீங்கு இழைத்திருக்கக்கூடும்.

'கக்கன்ஜி! நீங்கள் கழகத்தைக் கைவிட வேண்டும்' என்று நான் கூறியதாக வெளிவந்துள்ள செய்தியை நான் மறுக்கிறேன். கக்கன்ஜியையோ, அல்லது, தமிழ் நாடு காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருக்கும் வேறெவரையோ, கழகத்திற்காக வேலை செய்கிறார்கள் என்று நான் கற்பனைகூட செய்தது கிடையாது.

கூட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்; அவர்களில் எவரும், அந்தப் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் செய்தி தருவதைப் போன்ற எண்ணத்தைப் பெற்றுச் சென்றிருக்க முடியாது.

முதல் பகுதியைப் பொறுத்தமட்டில், வகுப்புவாத நோக்கம் கொண்ட சக்திகள் காங்கிரஸ் இயக்கத்தை அடிமை கொள்ள முற்படுவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நான் என்ன வாசகங்களை அங்கு உபயோகித்தேன் என்பது எனக்கு நினைவில் இல்லை. ஆனால், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருடன் நான் விவாதித்தபோது, இந்த விவகாரம் பற்றியும் நான் குறிப்பிட்டேன்."

—என்று, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் யு. என். தேபார், புதுடில்லியிலிருந்து மே 26-ந் தேதியிட்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

நாகர்களுக்குத் தனி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"அந்தப் படையில் பெண்களும் ஏராளமாகச் சேர்ந்திருப்பதும் உண்மையா?

"இரண்டு திங்களுக்கு முன், டன் நாட்டு மந்திரியை டில்லியில் சந்தித்த நாகர் தலைவர்கள், அசாமுக்குத் திரும்பிச் செல்கையில் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருப்பது உண்மையா?

"பருவகால நிலை காரணமாக, இராணுவ நடவடிக்கைகள் அங்கு நின்றுபோயிருப்பதும் உண்மையா?"

இப்படி எண்ணற்ற கேள்விகளை அடுக்கடுக்காக எழுப்பியிருக்கிறார், வல்லத்தரசு.

இவற்றிற்கு பதிலளிக்கையில் பிரதமர் நேரு குறிப்பிட்டதாவது:—

"இந்தக் கேள்விகள் எல்லாம் தவறான எண்ணத்தினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

"உதாரணமாக, மத்திய பிரதேச விசேட போலீசாரில் அரை 'பட்டாலியனை'ச் சேர்ந்தோர் மட்டுமே நாகமலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இவர்களில் எவரும் தீவிர நாகர்களிடத்தில் சரணடைந்து விடவில்லை. இராணுவ நடவடிக்கைகள் பருவநிலை காரணமாகவோ, அன்றி வேறெந்தக் காரணத்திற்காகவோ நிறுத்தி வைக்கப்படவில்லை; தொடர்ந்து நடைபெறுகின்றன.

"இளைஞர்கள் மாணவர்களடங்கிய நாகர் பாதுகாப்புப் படை ஒன்று திரட்ட முயற்சிக்கப்பட்டிருப்பது உண்மைதான்; ஆனால், சர்க்காருக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, இந்தப் படையில் ஏராளமான பெண்களோ, இளைஞர்களோ, மாணவர்களோ சேர்ந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை.

"நாகர் தேசியக் கவுன்சில் கலைக்கப்பட்டது என்ற விபரம், சில நாகர் தலைவர்களுக்கே பிடிக்கவில்லை; அவர்களில் பலர், இந்த தேசியக் கவுன்சிலைத் திருத்தி அமைக்கவேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளனர். டில்லி வந்து சென்ற நாகர் தலைவர் எவரும் கைது செய்யப்படவில்லை."

இரண்டு நாட்களுக்கு முன், வில்ஹெளமி என்ற ஒரு நாகர் தலைவர், சரணடைந்திருப்பதாகவும் நேரு கூறியிருக்கிறார்.

புதுவை தனி மாநிலமாகவே இருக்குமாம்!

பிரெஞ்சுக்காரர் சம்மதமின்றி நிலையை மாற்ற இயலாதாம்

மக்கள் சபையில் பிரதமர் நேரு தகவல்

புதுடில்லி, மே 28—

"புதுவை காரைக்கால் பகுதிகள் சட்டபூர்வமாக, இந்தியாவிற்கு அதனை மாற்றம் செய்யப்படுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதை ஒட்டி, அவை, மாநில புது அமைப்புத் திட்டத்தில் எப்படிப்பட்டதோர் இடம் பெறும்?' என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது, 'ஒப்பந்தம், மக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு ஒப்பந்தத்தில் கண்டிருக்கிறபடி, அவை தனி மாநிலமாகவே இருக்கும்' என்று இந்தியப் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

"நாம் தந்திருக்கிற உறுதி மொழிப்படி, அந்தப் பிரதேசங்களின் அந்தஸ்தை, பிரெஞ்சு சர்க்காரின் சம்மதமின்றி மாற்ற முடியாது; எனவே, இப்போது எந்தவித மாற்றமும் தேவை இல்லை அங்கு எப்படிப்பட்ட ஒரு சர்க்காரை நியமிக்கவேண்டும் என்பது வேறு விஷயம்,' என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

யோசனை செய்கிறாராம்!

திங்கள் ஒன்றுக்கு ரூ 300 சம்பளம் பெறுவோர்தான் ஐ. ஏ. எஸ் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்களென்ற விதியை, பி. ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறியவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் விஷயத்தில் மாற்றியமைப்பதுபற்றி தான் யோசனை செய்துகொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாபெரும் பொதுக்கூட்டம்

3-6-56 ஞாயிறு மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

மாநில மாநாட்டின் முடிவுகள்

குறித்து விரிவுரையாற்றுவார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. பொதுக்குழு

தோழர்களுக்கு:

'1—6—1956 மாலை 5-30 மணிக்கு, நமது மாவட்டக் கழக அலுவலகத்தில் வடசேரியில்) நடைபெறும் பொதுக்குழுவில், தாங்கள் அவசியம் கலந்து, தங்களது உயர்ந்த கருத்துக்களை தந்துதவ வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகிறேன்.

"கீழ்வரும் பொருள்கள்பற்றி விவாதித்து முடிவு செய்யப்படும்:—

1. நமது மாவட்டக் கழக மாநாடு நடத்துவது;
2. நமது மாவட்டக் கழகத்திற்கு நிதி திரட்டுவது;
3. மாநில மாநாட்டு தீர்மானங்கள்;
4. செயலாளரால் கொண்டு வரப்படும் இதர விஷயங்களைப் பரிசீலித்தல்;

என்று, நாஞ்சில் மாவட்டச் செயலாளர் வி. எம். ஜான் அறிவிக்கிறார்.

வெண்ணெயும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறப் போவதில்லை. நாட்டின் நன்மையைக் கருதியே, தெற்கில் ஒரு பெரிய இராஜ்யம் உருவாக வேண்டும் எனக் கூறுகிறேன் இராஜ்யங்கள் சிறிதாக இருந்தால், பொருளாதாரத்திலும், அபிவிருத்தியிலும் கணிசமான வளர்ச்சியைப் பெற முடியாது. சிறிய இராஜ்யமாக இருப்பதால் சில நன்மைகள் இருக்கக்கூடும் தேர்தலை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்நிலையில், தேர்தல் அவ்வளவு முக்கியமானது அல்ல."

"இப்பொழுது இருந்துவருவது போலவே விவகாரங்கள் தொடர்ந்து இருந்துவரப் போவதில்லை; என்றாவது ஒரு நாள், நாம் தட்சிணப் பிரதேசத்தைப் பெறத்தான் போகிறோம். அதைப் பெற நமது தலைவர்களுக்குப் போதிய பலம் இருக்கவேண்டும் என நான் விழைகிறேன்."

சொற்பயிற்சிக் கூட்டம்

1—6—56 மாலை 6 மணியளவில், சென்னை-1, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில், சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் மு. மனோகரன் தலைமையில், நடைபெறும். 'இன்றைய அரசியல்' என்ற தலைப்பில் மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா

2—6—'56 நிகழ்ச்சிகள்:

★

இயல் அரங்கு:

திருமதி. புட்பம் - நடராசன் தலைமையில், திரு. சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார் பாஸ்கர சேதுபதி படத்தைத் திறந்துவைப்பார்.

திரு. அ. இ. பரந்தாமனார்—'இசைப் புலவர்கள்'; திரு.பி ஆர். புருசோத்தம(நாயுடு) — 'வைணவம்'; திரு. எஸ்.எஸ். ஆனந்தம்—'தமிழர் மருத்துவக் கலை'; திருமதி கு. காமாட்சி - குமாரசாமி அம்மையார் — 'தமிழக மகளிர்'; திரு.ஏ.எஸ் நாராயணசாமி(நாயுடு) — 'தமிழர் சமூக வாழ்க்கை'; திரு. யோகி சுத்தானந்த பாரதியார்—'அயல் நாட்டாரின் தமிழ்த் தொண்டு'—ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவார்கள்.

இசை அரங்கு:

திரு. ஓ. பி. இராமசாமி(ரெட்டியார்) தலைமையில், குமாரி நீலா இன்னிசை விருந்து நடைபெறும்.

நாடக அரங்கு:

நீதிபதி திரு. என். சோமசுந்தரம் தலைமையில், திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் குழுவினரின் 'தமிழ்ச் செல்வம்' நாடகம் நடைபெறும்.

மறுமலர்ச்சி நூல் நிலைய ஆண்டுவிழா

2—6—56 மாலை 6-மணிக்கு சென்னை—மவுண்ட்ரோட், அப்பாவு கிராமணி தெருவில், மறுமலர்ச்சி நூல் நிலைய 5-ம் ஆண்டு விழா, தோழர் சுகுமார் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் டி. கே. சீனிவாசன், பி. ஆர். கோகுலகிருட்டினன், பால்வண்ணன், மாணவி பொ. சற்குணம் ஆகியோர் பேசுவர்.

தோழர் இரா. சண்முகம் இன்னிசை வழங்குவார்.

சென்னை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மாநாடு

3—6—56 ஞாயிறு பகல் 2-மணிக்கு, முள்ளிக்குப்பத்தில் தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில், மேற்படி மாநாடு நடைபெறும். அதுபோது, மீன் இலாகாவின் செயல்முறைப் பற்றி விவாதிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ.